**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.**60/2024

**Prosecution Witness** : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. கீத்த லோசினி | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. புகழ்நாதன் | **Calling** | : | |
| **Village** | : | கொட்டாரபட்டி, மாங்கரை | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 30 |
| | | | **Dated** | : | 19.06.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 1 திருமதி. கீத்த லோசினி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் கணவரின் தங்கையின் கணவர் ஆவார். 06.08.2023ம் தேதி, ஞாயிற்று கிழமை அன்று விடுமுறை என்பதால் என் கணவர் வீட்டில் இருந்தார். சரவணன் என்பவர் என் கணவருக்கு அண்ணன் முறை வேண்டும். என் கணவரிடம் மேற்படி சரவணன் தனக்கு உடல் நிலை சரியில்லை என்றும், தன்னை மருந்துவமனைக்கு அழைத்து செல்லும்படி

கேட்டார். அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு அவரை அவரது வீட்டில் விடச்சென்ற போது சரவணன் வீட்டின் எதிரே ஆஜர் எதிரியின் பாட்டி வீடு இருந்தது. ஏற்கனவே சரவணனுக்கும், எதிரி ராஜாவின் தாயார் மல்லிகாவிற்கும் 10 நாட்களுக்கு முன்பு நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. அதனால் ஏற்கனவே சரவணனுக்கும், எங்கள் வீட்டிற்கும் பிரச்சனை இருக்கிறது எப்படி சரவணனை மருத்துவமனைக்கு அழைத்து செல்லலாம் எனக் கேட்டு எதிரி ராஜா என் கணவரை தேவிடியா பயலே என திட்டிவிட்டு என் கணவரை கீழே தள்ளி என் கணவரை கையால் நெஞ்சின் மீது குத்தியும், தலையிலும் அடித்தார். என் கணவர் அலறினார். சத்தம் கேட்டு மேற்படி சரவணனும் மற்றும் சிலரும், செல்வக்குமாரும் ஓடி வந்து என் கணவரை சண்டையில் இருந்து விலக்கி அழைத்து வந்தனர். இந்த விபரம் தெரிந்து நான் அங்கு ஓடினேன். செல்வக்குமார் என் கணவரை கைத்தாங்கலாக அழைத்து வந்தார். நான் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். என் கணவர் மிகவும் சிரமப்பட்டதால் செல்வக்குமாரின் தம்பி செந்தில் குமாரின் காரில் வைத்து என் கணவரை மேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிக்சை அளித்தோம். அவரை அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவமனையில் என் கணவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்து விட்டதாக சொன்னார்கள். விபரம் தெரிந்து என் கணவரை பிணவரையில் வைத்த பிறகு 06.08.2023ம் தேதி அன்று மதியம் 01.00 மணிக்கு கன்னிவாடி காவல் நிலையம் சென்று சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **Ex.P1** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர். அதன் பிறகு 09.08.2023ம் தேதி அன்று ஆத்தூர் நீதிமன்றத்திற்கு சென்று நீதிபதியின் முன்பு வாக்குமூலம்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அது **Ex.P**2 ஆகும். ஆஜர் எதிரி அடித்ததால் தான் என் கணவர் இறந்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

எதிரி தரப்பில் இந்த வழக்கை பொறுத்து பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரை உள்ளவர்களில் 2, 3, 4 சாட்சிகள் நேரடி சாட்சிகள் என்பதால் மேற்கண்ட நான்கு பேரையும் ஒரே நாளில் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க மனு தாக்கல் செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.06.19 16:20:37 +0530